# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.

**O.S No.154/2020** **Date:03.06.2024**
**(P.W–1 )**

திரு.குமாரசாமி த/பெ.கருப்பணகவுண்டர்
**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1) தாவா சொத்து எங்களுக்கு பூர்விக வகையில் பாத்தியப்பட்டது என்றால் என் அம்மா வகையில் பூர்விகமாக பாத்தியப்பட்டது. காலை 147–ல் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 5.11 ஏக்கர் உள்ளது. காலை 147–ல் மேல்புற பகுதியில் எங்களுக்கு பாத்தியப்பட்ட பூமி எவ்வளவு என்றால் 5.11 ஏக்கர் ஆகும். மேற்படி பூமி தாயார் வகையில் பாத்தியப்பட்டது என்றால் என் தாத்தா என் அம்மாவுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார். 18.06.2014–ல் நானும் என் சகோதரரும் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினைப்படி 2.47 1/2 ஏக்கர் எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் பூமியின் மேல்புறத்தில் தென்வடலாக தார் ரோடு செல்கிறது என்றால் சரிதான்.

2) எனக்கு வந்த பூமியில் நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். என் பூமியில் 25 1/2 செண்ட் பூமியை என் மனைவி பெயருக்கு தானசெட்டில்மெண்ட் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 09.06.2017 தேதி காலை 147/1–ல் வடகிழக்கு பகுதியில் 50 செண்ட் பூமியை 1ம் பிரதிவாதி கனகராஜுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கும் 50 செண்ட் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளுக்கு தலா 50 செண்ட் வீதம் ஒரு ஏக்கர் கிரையம் கொடுத்து சுவாதீனமும் கொடுத்துள்ளேன் என்றால் என்னுடைய பூமி 2.47 1/2 ஏக்கரில் 1, 2 பிரதிவாதிகளுக்கு தலா 50 செண்ட் கிரையம் கொடுத்துள்ளேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டு கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2024.06.03 18:39:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.